[பேரவைத் தலைவர்] [1967 மார்ச் 29

"திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி தாலுகாவில், குடும்பக் கார்டு முறை அமுலில் இருந்தும் நகரப்புறங்களில் குறைந்த அளவிலும், கிராமங்களில் விநியோகம் முற்றிலும் நின்று விட்டதால், உணவு தானியம் கிடைக்காமல், மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்று தகவல் வந்துள்ளதால் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க" என்று தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். இது அரசினரின் சாதாரண நிர்வாக இயந்திரத்திற்கு உட்பட்ட காரியம் என்ற காரணத்தினால் அதற்காக அவையை ஒத்தி வைக்க தேவை இல்லை என்று கூறுகிறேன்.

3. அரசினர் தீர்மானம்.

41 (3) விதியைத் தளர்த்துதல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்தாற்போல, இன்று 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மூன்று உள்ளன. ஒரே நாளில் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு மேல் கொண்டு வருவதற்கு விதிகளிலே இடம் இல்லை. ஆகையால் மூன்று தீர்மானங்களைக் கொண்டுவருவதற்கு இந்தப் பேரவையின் விதியைத் தளர்த்தியாக வேண்டும். எனவே, மன்ற முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட விதியை இன்று மட்டும் தளர்த்தவேண்டு மென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து அதை முன்னுரைப் பார்கள்.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 244-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்னுரைக்கிறேன் :—

"சட்டப் பேரவை விதிகளின் 41 (3)-வது பிரிவின்கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு மேற்பட்டு எழுப்பக் கூடாது என்றுள்ள விதியைத் தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

4. கவன ஈர்ப்பு

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கடன் தவணை வசூல் ஒத்திவைப்பு

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவர் அவர்களே, 1966-ம் வருடம் பருவ மழைக் குறைவினால் திருநெல்வேலி ஜில்லாவில் செங்கோட்டை, தென்காசி, சங்கரன்கோவில் தாலூக்காக்களில் பயிர்கள் காய்ந்து சேதம் ஏற்பட்டதின் காரணமாக அங்குள்ள விவசாய மக்கள் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய பலவிதமான கடன் துறைகளின் தவணைத் தொகை ஒரு வருடத்திற்கு அரசாங் கத்தாரால் ஒத்திவைக்கப்பட்டது (ஜீ.ஓ. எம்.எஸ். நெ. 1162, ரெவின்யூ, 6—4—1966). இவ்வருடம் (1967-ல்) மேற்படி கடன்களை